### த.வெ.க. கையில் ஆட்சி அதிகாரம் இருக்கிறது

# ‘தி.மு.க. நிர்வாகிகள் வீடுகளில் லஞ்ச ஒழிப்பு சோதனை நடப்பது சாதாரணம்’

## முன்னாள் அமைச்சர் இ.பெரியசாமி பேட்டி!



திண்டுக்கல், செப்.7-

திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் திண்டுக்கல்லில் நடைபெற்றது கூட்டத்துக்கு அவைத்தலைவர் (கிழக்கு) காமாட்சி தலைமை தாங்கினார். அவைத்தலைவர் மோகன் முன்னிலை வகித்தார். கழக துணை பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான இ.பெரியசாமி எம்.எல்.ஏ, முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார் எம்.எல்.ஏ. தலைமை கழக பிரதிநிதிகள் செல்வம் எம்.பி, பிரபு ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் நாகராஜ், மார்கிரேட் மேரி, பிலால், பொருளாளர் சத்தியமூர்த்தி, மாநகர செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி, ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாநகர நிர்வாகிகள் அழகர்சாமி, சரவணன், பகுதி பொறுப்பாளர் சூசைராபர்ட் உள்பட பலர் கலந்து கொண்டனர். அதன் பின்னர் முன்னாள் அமைச்சர் இ. பெரியசாமி, நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

கழகம் 75 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க இயக்கம். தற்போது ஆட்சி அவர்கள் கையில் (த.வெ.க.) இருக்கிறது. அதனால் முன்னாள் அமைச்சர் நேரு உள்பட தி.மு.க. நிர்வாகிகள் வீடு மற்றும் உறவினர்கள் வீடுகளில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடப்பது சாதாரண விஷயம். அவர் மீது வழக்கு போடட்டும். கோர்ட்டு மூலம் வெற்றி பெறுவோம். முதல் அமைச்சர் விஜய், சட்டசபையில் வாய் திறப்பதே இல்லை. மவுனமாகவே இருக்கிறார். எதிர்க்கட்சிகள் மீது ஆளும் கட்சி குற்றச்சாட்டு கூறும் போது சட்டமன்ற விதிமுறை களின் படி பதில் சொல்லக்கூடிய உரிமை எதிர்க்கட்சிகளுக்கு உள்ளது. அதை மறுக்க முடியாது. த.வெ.க.வுடன் கூட்டணி வைத்துள்ள கட்சிகளின் கொள்கை முரண்பாடாக இருக்கிறது. கூட்டணி கட்சிகளின் கொள்கைகளை ஆக்கிரமிக்க நினைக்கக் கூடாது. அப்படி செய்தால் அந்த கட்சிகள் கூட்டணியை விட்டு வெளியேறிவிடும்.

இவ்வாறு கழக துணை பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இ.பெரியசாமி கூறினார்.

### விருப்பாச்சியில் விடுதலைப் போராட்ட வீரர்

# கோபால் நாயக்கரின் 225ஆவது நினைவு நாள்!

## அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை!

ஒட்டன்சத்திரம், செப்.7-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், விருப்பாட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபத்தில் 225ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. கோபால்நாயக்கரின் திருவுருச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் பேசியதாவது.

விருப்பாட்சியை 40 ஆண்டுகள் ஆட்சி செய்து வெள்ளை ஏகாதிபத்தித்தால் தூக்கிலிடப்பட்ட, தமிழ்நாட்டின் மிகப் பெரிய விடுதலைப் பேராட்ட வீரர் குப்பளப் பாட்சா என்று திப்புசுல்தானாலும், கோபால் நாயக்கர் என்று மக்களாலும் அன்புடன் அழைக்கப்பட்டவர் திருமலை குப்பளசின்னப்ப நாயக்கர். விருப்பாட்சியைச் சுற்றிலும் தன்னுடைய உறவினர்களை கொண்டு பல ஊர்களை உருவாக்கி ஆண்டு வந்தார்.

வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து திண்டுக்கல் பகுதியில் போரிட்டவர் விருப்பாட்சி கோபால் நாயக்கர். இவர் சிவகங்கை ராணி வேலுநாச்சியார், பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரை ஆகியோருக்கு தேவையான பாதுகாப்பையும், படை பலத்தையும் வழங்கியவர். கடந்த 05.09.1801ம் ஆண்டு, நாட்டின் விடுதலைக்காக உயிர் தியாகம் செய்த கோபால் நாயக்கரின் நினைவாக கடந்த திமுக ஆட்சியில் 20062011 ஆண்டில் விருப்பாட்சியில் ரூ.69 இலட்சம் மதிப்பீட்டில் அவர்களின் முழு உருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் தமிழக அரசு சார்பில் அனுமதி வழங்கப்பட்டு, பின்னர் 20.02.2013 அன்று திறந்து வைக்கப்பட்டது. மேலும், விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கரின் நினைவு தினம் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்திய திருநாட்டின் நலனுக்காக பாடுபட்ட தலைவர்கள் வழியில், நாமும் செயல்பட்டு, நாட்டின் நலனை காப்பாற்ற இந்நாளில் உறுதி எடுத்துக் கொள்வோம் என அர. சக்கரபாணி எம்.எல்.ஏ பேசினார்.

இந்நிகழ்ச்சியில் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.சாமிநாதன், ஒன்றியசெயலாளர்கள் தர்மராஜன், தங்கம்.எஸ்.ஆர்.கே. பாலு வீரபாண்டிய பண்பாட்டுக் கழகமாநில பொதுச் செயலாளர் ராமகிருஷ்ணன், கோபால்நாயக்கர் சேவாசங்கதலைவர் செந்தில்குமார்,

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி, ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் தமிழ்வேந்தன், ஊர் தலைவர் செந்தில்நாதன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் தினேஷ், முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கௌரி சரவணன் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

### ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது!

# நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம்!

## மு.அப்பாவு - ஜோயல் - முத்துராஜா எம்.எல்.ஏ.பங்கேற்பு!

நெல்லை.செப்.7-

கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க கழக மறுசீரமைப்பு தொடர்பான நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க.செயற்குழு கூட்டம் வள்ளியூர் எம்.எஸ்.மஹாலில் மாவட்ட கழக பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில், தலைமை கழக பிரதிநிதிகள் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜோயல், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சா.ஞான திரவியம், எஸ்.ஏ.கே. சித்திக்,மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர்கள் நம்பி, ஜார்ஜ் கோசல்,அல்போன்ஸ், ஹரி கிருஷ்ணன்,அனுராதா,சந்திரகலா, பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன்,கனகராஜ்,சாந்தி சுபாஷ், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, போர்வெல் கணேசன்,சுடலைக்கண்ணு, செல்வ கருணாநிதி,ஆரோக்கிய எட்வின், சேவியர் செல்வ ராஜா, எரிக்ஜுடு,சுபாஷ் சந்திர போஸ், நகர செயலாளர் மணிசூரியன்,பேரூர் செயலாளர்கள் சேதுராம லிங்கம்,அயூப்கான், தமிழ் வாணன்,கசமுத்து,வானுவாமலை, முருகையா, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மாடசாமி,முருகன், மல்லிகா அருள்,பிரேமா,திருப்பதி ஜெயசீலன், அழகுமுத்து,சேகர்,முருகன் மற்றும் சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள்,கிளை கழக செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக பலர் கலந்து கொண்டனர்.

# தேனி வடக்கு மாவட்ட, செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன். எம்.பி. அறிக்கை!



தேனி, செப்.7-

தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்செல்வன். எம்.பி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தேனி வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் தேனி ABM ஹோட்டலில் 09.09.2026-புதன் கிழமை அன்று மாலை 5 மணி அளவில் மாவட்டக் கழக அவைத் தலைவர் பி.டி செல்லப்பாண்டியன் தலைமையில், கழக மறுசீரமைப் பின் தலைமைகழக பிரதிநிதிகள் : சுபா சந்திரசேகர் கழக சட்டதிட்ட திருத்தக் குழு இணைச்செயலாளர், கவிஞர் காசி முத்து மாணிக்கம். மாநில வர்த்தகர் அணி செயலாளர் ஆகியோர்களது முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுசமயம், செயற்குழு கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், முன்நாள் இன்நாள் நாடாளுமன்ற உறுபினர்கள் மற்றும் சட்டமன்ற உறுபினர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள்,உள்ளாட்சி மன்ற தலைவர்கள் கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைபாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:1. அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத் தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி, ஒன்றியம்,நகரம், பேரூர் கழகம் மறுசீரமைப்பு குறித்து 2. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன்.எம்.பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்பு!

# தென்காசி ஆசாத் நகரில் வெடிவிபத்து! 20 குடிசைகள் சேதம்!

## மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு!

தென்காசி,செப்.7-

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆசாத் நகரில் ஏற்பட்ட வெடி விபத்தில் 2 பெண் குழந்தைகள் காயம் அடைந்துள்ளனர்.

20க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்துள்ளது. இது பற்றிய தகவல் அறிந்ததும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன்,நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறினார். அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியரை தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கோரி வேண்டுகோள் விடுத்தார்.அப்போது தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் உடனிருந்தார்.

தென்காசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆசாத் நகரில் நேற்று முன்தினம் (4/9/2026,) மதியம் 1 மணி அளவில் வெடி விபத்து ஏற்பட்டது.இதில் 2 பெண் குழந்தைகள் காயமடைந்து தீவிர சிகிச்சை பெற்றுவருகின்றனர். மேலும் 20 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்து பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.அதில் குறிப்பாக 10 வீடுகளின் மேற்கூரைகள் முற்றிலும் பாதிக்கப்பட்டு ஓடுகள், சிமெண்ட் சீட்டுகள் உடைந்து நொருங்கியுள்ளது.மேலும் வீட்டின் நிலை, ஜன்னல் கழன்றும்,கண்ணாடிகள் உடைந்தும் சேதம் அடைந்துள்ளது. இந்த வீடுகளில் யாரும் தங்க முடியாத சூழல் நிலவுகிறது மற்ற வீடுகளின் சுவர்கள் மற்றும் மேற்கூரைகளில் விரிசல் ஏற்பட்டு இடிந்து விழும் நிலையில் உள்ளது.

இந்த விபத்து பற்றிய தகவல் அறிந்ததும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன்,மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம்,வார்டு கவுன்சிலர் ராமகிருஷ்ணன்,மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் முத்துக்குமார் மற்றும் கழக நிர்வாகிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

அதனை தொடர்ந்து மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ.மாவட்ட ஆட்சியரை தொடர்பு கொண்டு உடனடியாக பாதிக்கப்பட்டு வீடுகளில் தங்க முடியாத நிலையில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு,போதுமான இழப்பீடு தொகை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

### மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் ஆண்டிபட்டியில்

# தறியே இல்லாமல் உற்பத்தி செய்ததாக கணக்கு காட்டி பல கோடி மோசடி!

## நேர்மையான அதிகாரிகள் கண்டுகொள்ளாதது ஏன்?

தேனி செப்.7-

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஜக்கம்பட்டி மற்றும் டி.சுப்புலாபுரம் பகுதிகளில் கைத்தறி மற்றும் பிடல் தறி இல்லாமலேயே, இருப்பதாக போலியாக கணக்கு காட்டி, நெசவாளர்கள் பெயரில் பல கோடி ரூபாய் மோசடி நடந்துள்ளதாக புகார் எழுந்துள்ளது. நேர்மையான அதிகாரிகள் இருக்கும் நேர்மையான ஆட்சியில் இது எப்படி கண்டுகொள்ளாமல் இருந்து வருகிறது என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

100க்கும் மேற்பட்ட தறிகள் இயங்கிய பகுதி:

ஆண்டிபட்டி, டி.சுப்புலாபுரம் பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட கைத்தறி மற்றும் பிடல் தறி இயங்கி வந்தன. நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இதனை நம்பி வாழ்ந்து வந்தன.

தறி இல்லாமல் உற்பத்தி செய்ததாக மோசடி:

ஆனால் மைனாரிட்டி தவெக ஆட்சியில் நடந்ததாக கூறப்படும் மோசடியில், உண்மையில் கைத்தறி, பிடல் தறி இல்லாத நபர்கள், தங்கள் வீட்டில் தறி இருப்பதாகவும், துணி உற்பத்தி செய்வதாகவும் போலி ஆவணங்கள் தயாரித்துள்ளனர்.

உற்பத்தியே செய்யாமல், உற்பத்தி செய்ததாக கணக்கு காட்டி, அரசிடம் இருந்து நூல் மானியம், ஊக்கத்தொகை, இலவச மின்சார மானியம், கூட்டுறவு சங்க கடன் தள்ளுபடி என ஒரு நபருக்கு லட்சக்கணக்கில் பணம் பெறப்பட்டுள்ளது. இப்படி பல நபர்கள் மூலம் பல கோடி ரூபாய் அரசு பணம் சுருட்டப்பட்டுள்ளதாக நெசவாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

நேர்மையான அதிகாரிகள் கண்டுகொள்ளாதது ஏன்?

தமிழகத்தில் நேர்மையான ஆட்சி நடைபெற்று வருவதாகவும், மாவட்டத்தில் நேர்மையான அதிகாரிகள் பணியாற்றி வருவதாகவும் கூறப்படும் நிலையில், இவ்வளவு பெரிய மோசடி எப்படி கண்டுகொள்ளாமல் விடப்பட்டது என்பது பொதுமக்களின் கேள்வியாக உள்ளது.

கைத்தறி துறை அதிகாரிகள் முறையாக கள ஆய்வு செய்திருந்தால், தறி இல்லாத இடத்தில் தறி இருப்பதாகவும், உற்பத்தி இல்லாத இடத்தில் உற்பத்தி நடப்பதாகவும் காட்டப்பட்ட போலி கணக்குகள் வெளிச்சத்திற்கு வந்திருக்கும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

கோரிக்கை:எனவே இது குறித்து மாவட்ட ஆட்சியர் நேரடியாக தலையிட்டு, ஆண்டிபட்டி, டி.சுப்புலாபுரம் பகுதியில் உள்ள ஒவ்வொரு நெசவாளர் வீட்டிற்கும் சென்று தறி உள்ளதா? உண்மையில் உற்பத்தி நடக்கிறதா? என ஆய்வு செய்ய வேண்டும்.

போலியாக பணம் பெற்றவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அந்த பணத்தை மீட்டு உண்மையான நெசவாளர்களுக்கு வழங்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

### கழகத்தின் கொள்கை வழியை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில் பல்வேறு நலஉதவிகளை வழங்கி

# கழக முப்பெரும் விழாவை எழுச்சியுடனும் சிறப்புடனும் கொண்டாடுவோம்!

## சென்னை கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! பேரா.ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. – ஆஸ்டின் எம்.எல்.ஏ. – பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. சிறப்புரை!





சென்னை, செப்.7-

சென்னை கிழக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் 5.9.2026 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில், மாவட்ட அவைத் தலைவர் கோ. ஏகப்பன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமைக்கழக பிரதிநிதிகள் பேரா. ஜெ. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., ஆஸ்டின் எம்.எல்.ஏ. மற்றும் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மேலும், இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், வழக்கறிஞர் தாயகம் கவி, அ. வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், ப.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.கே. மூர்த்தி, எம். விஜய குமார், கே.எஸ்.எம். நாதன், கே.சந்துரு, சி.மகேஷ் குமார், வே. உமாகாந்தன், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, ஆர்.வரதன், தேடல். புருஷோத்தமன்,

மாவட்ட நிர்வாகிகள்: கோ. ஏகப்பன், ஜி.எம். தேவன், புனிதவதி எத்திராஜன், இசட். ஆசாத்,

பகுதிக் கழகச் செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, ஐ.சி. எஃப். வ. முரளிதரன், எ. நாகராஜன், கூ.பீ.ஜெயின், வே.வாசு, சொ.வேலு, எஸ்.ராஜசேகர், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், எஸ். முரளி,

பொதுக்குழு உறுப்பினர்கள்: டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், கோ. மணி, ஏ.பி. பூர்ணிமா, ரமேஷ் (எ) நீலகண்டன், எம். இப்ராஹீம் கனி, இரா. கலைச்செல்வி, சரிதா மகேஷ் குமார், அ. நிர்மலா தேவி,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், ஜெ. பாலமுருகன், க. வினோத், எஸ். தனசேகர், ஜி.ஜே. பிரபு, பி. ஸ்ரீராமுலு, நா. ரஞ்சித், விஜயா லயன், ஜி. தாமோதரன், கு. கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், பி. விஜயகுமார், எல். சம்பத் குமார், எம். விநாயகம், ம. அசோக் குமார், சுதா தீன தயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர் ஜி. சாந்த குமாரி மற்றும் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், செயல்வீரர்கள், முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**தீர்மானம் – 1**

ஆகஸ்ட் 22 ஆம் நாள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையில்,

“நாம் பார்க்காத வெற்றியும் இல்லை; நாம் பார்க்காத தோல்வியும் இல்லை. தேர்தலில் தோல்வி அடைந்திருக்கிறோமே தவிர, அது நிரந்தரமானது அல்ல. கழகத்தின் எதிர்காலத்தைத் திட்டமிட நமக்குக் கிடைத்துள்ள கால அவகாசமாக இதனை எடுத்துக் கொள்வோம்” என்று குறிப்பிட்டார்.

மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு முறை, “இந்தக் கருணாநிதியின் வாழ்வு முடிந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாழ்வு முடியாது; அதனை அதன் அமைப்புதான் காப்பாற்றும்” என்று கூறிய வரிகளைச் சுட்டிக்காட்டி, அந்த அடிப்படையில் கழகத்தின் அமைப்பு முறையில் மிகப்பெரிய சீரமைப்பை மேற்கொண்டு, கழகத்தை மேலும் வலிமைப்படுத்துவதற்கான பணிகளை முன்னெடுத்து வரும் கழகத் தலைவர் அவர்களை மனமாரப் பாராட்டி, இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றுகிறது.

**தீர்மானம் – 2**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கழக நிர்வாகச் சீரமைப்புத் தீர்மானத்தின் அடிப்படையில், மாவட்ட, பகுதி மற்றும் வட்டக் கழகங்களின் மறுசீரமைப்பு தொடர்பாக கழகத் தலைமை மேற்கொள்ளும் அனைத்து முடிவுகளுக்கும் முழுமையாகக் கட்டுப்பட்டு, கழகத்தின் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் ஒருங்கிணைந்து தீவிரமாகப் பணியாற்றுவது என இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றுகிறது.

**தீர்மானம் – 3**

தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட நாள் ஆகிய மூன்று வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளையும் இணைத்து, “பெரியார் - அண்ணா - கழகம்” என்ற உணர்வோடு, செப்டம்பர் 15 ஆம் தேதி சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் முப்பெரும் விழாவில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பது எனவும்,

மேலும், அன்றைய தினம் காலை சென்னை கிழக்கு மாவட்டம் முழுவதும் வட்டங்கள் தோறும் கழகக் கொடியேற்றி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கை வழியை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, முப்பெரும் விழாவை எழுச்சியுடனும் சிறப்புடனும் கொண்டாடுவது என இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றுகிறது.